உலக ஆணழகன் போட்டி மாலத்தீவில் நடைபெற்றது. பல நாடுகளில் இருந்து 350க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்ற இந்த போட்டியில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சரவணன் மணி 90 கிலோ எடை பிரிவில் தங்கம் வென்றார். இதையடுத்து 55 கிலோ முதல் 100 கிலோ வரை எடை பிரிவில் தங்கம் வென்றவர்கள் இடையே நடந்த 'சாம்பியன் ஆப் சாம்பியன்' போட்டியிலும் சரவணன் தங்கப்பதக்கம் வென்று 'மிஸ்டர் யுனிவர்ஸ்' பட்டத்தை தட்டிச் சென்றார். தமிழ்நாட்டைச் சேர்ந்த மரிய ஜிஜோ 80 கிலோ எடை பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார். பதக்கம் வென்ற இருவரும் அமைச்சர் தா.மோ.அன்பரசனை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், அரசு, அர்ஜீன் அவார்டு பாஸ்கரன், பாலமுருகன் உடன் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்! மு.க.தமிழரசு - தயாநிதி மாறன் -

அன்பகம் கலை - மருத்துவர் எழிலன் நாகநாதன் முன்னிலையில்

113வது 'ஆ' வட்ட செயலாளர் எம்.என்.விஷ்ணு திருமண வரவேற்பு!

இன்று நடைபெறுகிறது!

சென்னை, அக்.14-

113 'ஆ' வட்ட செயலாளர் எம்என்.விஷ்ணு வா. சோனியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (14-11-2024 வியாழன் கிழமை) மாலை 7.00 மணிய ளவில் நடைபெறுகிறது. திருமணத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் மு.க.தமிழரசு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கலை கதிரவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை வரவேற்புரையில்

திருமண விழாவிற்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் எஸ்.மோகன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் வே.கவுதமன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா, பகுதி கழகச் செயலாளர் நா.ராமலிங்கம், எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம் காமராஜ், ச.பரமசிவம், கே.ஏழுமலை, பெரியமேடு வி. சுதாகர், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, கார்த்திக்மோகன்,

மாநில நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் சுபேர்கான், இறையன்பன் குத்தூஸ், குமரி விஜயகுமார், ராணி ரவிச்சந்திரன், கோபால் ராம், வி.பி. பொன்னரசு, வி.பி.மணி, அழகிரி சதாசிவம், வி.என்.ராஜன், நுங்கை வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர்.நாதன், ஜெ நற்குணநாதன், கே.ஜே.சரவணன், எஸ்.சுரேஷ்குமார், ஜோஸ் டேனியல், பா.இராபட், எம். வெற்றிச்செல்வி, எஸ்.எம். கே.அண்ணாதுரை, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், ராஜா அன்பழகன், யோகேஸ்வரி சுந்தரராஜன், லதா பிளாரன்ஸ், ச.அசோக்குமார், டி.எஸ்.ராஜா, ரகமத்துல்லா, விஜயராஜ், தேவேந்திரன், இளம்பாரதி, மு.செந்தில் குமார், எம்.கே.ஆனந்த், மூ. சீனிவாசன், ராஜராஜன், சாரதி மணிமாறன், என்.அரவிந்த், ஜீவகன் அய்யநாதன், ஜி.வி.சரவணன்,

ஆயிரம் விளக்கு கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் எம் ஆர் ஜம்புலிங்கம் கோ.ரவி மு.வெங்கடேசன் டி.வையலட் மேரி எம். ஜெயக்குமார், புவி.பாலாஜி, இதயத் பாஷா, ஸ்டல்லிங் மோகன், பொன்னம்மாள் கமலக்கண்ணன், ஆயிரம் விளக்கு கிழக்கு மேற்கு பகுதி வட்ட கழக செயலாளரகள் கோ.யுவராஜ், நுங்கை ப. மகேஷ், எப்.பீட்டர் ஜான், ஆர்.பாபு, த.தேவராஜ், எஸ். சத்திய பெருமாள், எல்.தவமணி,

எஸ்.எம்.கே.ராமன், வரதை த.பரி, மு. மோகன், க.சிட்டிபாபு, டேவிட் இன்பராஜ், கே.எஸ்.தினேஷ் பிரபு, த.குணசேகர், மாமன்ற உறுப்பினர்கள் யு.மல்லிகா, எம்.ஏ.நந்தினி, பிரேமா சுரேஷ், எலிசபெத்அகஸ்டின், திருமலை பொன்னுரங்கம், வருகை புரியும் அனைவரைக்கும் ஏ.ஆர்.மணி,டி.கே.ரமேஷ், எம்.என்.அருண், எச்.அப்துல்லாசா, எம்.துரைராஜ், எம்.பிளாங்கின், ஜிகே. மணிகண்டன், பி.விநாயகம், ஜி.கே.ஐயப்பன், பி.சரவணன்,ஏ. துரைராஜ், அச்சரப்பாக்கம் சூர்யா ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வாழ்த்து!

132 'அ' வட்டப் பொருளாளர் சி.கோபிநாத் இல்ல மணவிழா வரவேற்பு!

கே.எஸ்.வெல்டிங்ராஜா தலைமையில் இன்று நடைபெறுகிறது.

சென்னை, நவ. 14-

132 அ வட்டப் பொருளாளர் சி.கோபிநாத் இல்ல மண விழாவில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகாயர் நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக பொருளாளர் சி.கோபிநாத் இல்ல திருமண விழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (14-11-2024 வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் மாம்பலம் சென்னை 33 ல் அமைந்துள்ள டி.என்.சோமசுந்தரம் நாடார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 132 அ வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா தலைமை தாங்குகிறார். கே.எஸ்.வெல்டிங்மணி, கோடம்பாக்கம் மு.சத்தியா, திருமதி கார்த்திகா பாஸ்கர் எம்.சி., வட்டச் செயலாளர் நா.மோ.முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னாள் நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

வி.முருகன் தலைமை! க.ஜெயராமன் அ.முருகன் முன்னிலை! ஜோதி காமாட்சிராஜன்- கன்னிகை ஸ்டாலின் பங்கேற்பு!

பெரம்பூர் 46 வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

சிவாஜி கிருஷ்ணமூர்த்தி - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - டாக்டர் கலாநிதி வீராசாமி சிறப்புரை!

சென்னை, நவ,14,

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலஉதவிகள் வழங்கும் விழா இன்று (14.11.2024 வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு வியாசர்பாடி, ஹவுசிங் போர்டு, சத்தியமூர்த்தி நகரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் வி.முருகன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் மற்றும் வி. வேதா, சி.ஆனந்தி, வை. கௌதமன், வெ.இன்பரசன், க.ஜெயராஜ், கதிரவன் மணி, பி.ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.டி.மணிமாறன், ஜி. ஜெயகுமார், ச.ராஜன், ஆர். ரசீதா, பி.கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா, கே.பிசாந்த், எம். ஜெயகிருஷ்ணன், இ.மணி கண்டன், ஜி.கணேசன், எஸ். சங்கீதா, ஜி.மோகன், ஒய்.மகிமைராஜ், பி.ராதாகிருஷ்ணன், எம்.அருண், எஸ்.கார்த்திக் ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர்.

இதில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுகின்றனர்.

மேலும் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., செ.ஜோதி காமட்சிராஜன், கன்னிகை ஸ்டாலின், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, ந.சர்ப ஜெயாதாஸ், ஏ.தமிழ்ச்செல்வன், ப. மதிவாணன், டி.கமலக்கஷ்ஷன், க.அமுல், க.சர்மிளா காந்தி, க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி. மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், கே.வி.ராஜன், என். கார்த்திபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழ்அரசு, சி.எஸ்.இரவி, மு. சாகுல் அமீது, எஸ்.சாக்ரடீஸ், ஆர்.ஜோதிமணி, வி. எஸ்.பிரபு, சி.சுரேஷ், அ. ஜியாவுதீன், இரா.ஸீலாவேலு, எம்.லதா, ஏ.செந்தூர் பாண்டியன், எச்.ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். ஆர் ரகு நன்றி கூறினார்.

சுயமரியாதை சுடரொளி என்.ஜீவரத்தினம் அவர்களின் 113வது பிறந்த நாளை முன்னிட்டு ஆர். கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அவரின் மகள் பானுமதி பாஸ்கரன், பகுதி கழகச் செயலாளர் இரா.லட்சுமணன், வட்டச் செயலாளர் பிரேம் ஆனந்த், மாமன்ற உறுப்பினர் என்.பவித்ரா மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர்

வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணி!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

உதகை, நவ.14-

1.1.2025ஐ தகுதியேற்படுத்திடும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியலில் 28.11.2024 சனிக்கிழமை வரை திருத்தங்கள் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியலை 29.10.2024 அன்று வெளியிட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெற்று, அதனை அனைத்து நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்களுக்கும் நகரஒன்றியபேரூர் கழகங்கள் வாரியாக பிரித்து வழங்கப்பட்டு உள்ளது.

வாக்காளர் பட்டியலைப் பெற்றுக்கொண்;ட நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் உடனடியாக தங்களது பகுதிகளுக்கு உட்பட்ட வாக்குசாவடி பாகம் வாரியாக அந்தந்த வார்டுகிளை கழக செயலாளர்களிடம் ஒப்படைத்தும், விரைந்து செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன். அனைத்து வாக்குச்சாவடி கிளைகளுக்கும் வாக்காளர் பட்டியல் கிடைத்துள்ளதை சட்டமன்ற தொகுதி பார்வையாளர்களும் உறுதி செய்துள்ளனர்.

வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியில் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து எவ்வித சுணக்கமுமின்றி முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று தலைமை கழகத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அன்பு கட்டளையை ஏற்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் இன்றியமையாப் பணியில் விரைந்து ஈடுபட வேண்டும்.

புதிய வாக்காளர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் எதிர்வரும் நவம்பர் 16,17 (சனி,ஞாயிறு) மற்றும் நவம்பர் 23,24 (சனி,ஞாயிறு) ஆகிய நாட்டகளில் அந்தந்த வாக்குசாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு முகாம்களில் அனைத்து பாக நிலை முகவர்கள் பி.எல்.ஏ.-2 மற்றும் வாக்குச்சாவடி குழுவினர் பி.எல்.சி. அனைவரும் தவறாது கலந்துக்காளெ்ள கேட்டுக் கொள்வதோடு,

புதிய வாக்காளர் சேர்ப்பின்போது (18வயது நிரம்பிய) படிவம்6 பூர்த்தி செய்து உரிய ஆதாரங்களை இணைத்து வழங்கிட வேண்டும். இறந்த அல்லது இடம் பெயர்ந்த வாக்காளர்கள் நீக்காமல் தொடர்ந்து இடம் பெற்றிருந்தால் உரிய ஆதாரங்களை இணைத்து படிவம்7ல் பூர்த்தி செய்து வாக்காளர் இறந்திருந்தால் இறப்பு சான்றிதழை அந்தந்த குடும்பத்தி னரிடம் இருந்து பெற்று அவர்களது ஒப்புதல் கடிதத்தை இணைத்து வழங்கிட வேண்டும்.

மேலும் வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் பிழை, திருத்தங்கள், முகவரி மாற்றம் ஏதாவது இருந்தால் படிவம்8, படிவம் 8ஏ ஆகிய படிவங்களை பூர்த்தி செய்து வழங்கிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலை சரிபார்த்த பின்பு பூர்த்தி செய்துள்ள படிவம்6, படிவம்7, படிவம்8, படிவம்8ஏ ஆகிய படிவங்களுடன் உரிய சான்றிதழ் ஆதாரங்களை அந்தந்த வாக்குசாவடி நிலை அலுவலரிடம் சிறப்புமுகாம்கள் நடைபெறும் நாட்களில் கழகத்தினர் வழங்கிட வேண்டும் என்றும் வேண்டுவதோடு, மேற்கண்ட நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் அனைத்து கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நம் கழக ஆதரவு புதிய வாக்காளர்களை சேர்க்கும் இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் முணைப்புடன் செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன்.

நவம்பர் 16,17 (சனி - ஞாயிறு) மற்றும் 23,24 (சனி - ஞாயிறு) ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர் சரிபார்த்தல் பணிகள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன் என்று மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கே.இ.செந்தமிழ் அரசு தலைமை!அ.முருகன் - க.ஜெயராமன் -எஸ்.ஆர்.கமலக்கண்ணன் முன்னிலை!

பெரம்பூர் 37 வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

இரா.ராஜீவ்காந்தி - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - ரிஷி சந்தோஷ் சிறப்புரை!

சென்னை,நவ,14,

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 37வது வட்ட தி.மு.கசார்பில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (14.11.2024, வியாழக்கிழமை) மாலை 6.30 மணிக்கு 3வது மத்தியகுறுக்கு தெரு, மகாகவிபாரதி நகர், சென்னை39. இல் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் கே.இ.செந்தமிழ் அரசு தலைமை வகிக்கிறார். அ.முருகன், க.ஜெயராமன் , எஸ்.ஆர்.கமலக்கண்ணன், ஏ.ஜியாவுதீன், எம்.அருண்சக்ரவர்த்தி,ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். என்.ஏ..தேவஅன்பு, ஆர்.. மோகன் வி.சிவக்குமார் ஆர். விஸ்வநாதன்,எம்.ஆர்.வேலு, என்.விக்டோரியா, எம்.சண்முகம், ஏ.ஜெயக்குமார், பிகுமார், ஆர்.விக்னேஸ்வரன், கே.ஏழுமலை ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர். நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர்.எம்.எல்.ஏ. டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இளம் பேச்சாளர் ரிஷி சந்தோஷ் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், வி.தயாளன், ஏ.தமிழ்ச்செல்வன்,ப. மதிவாணன் , டி.கமலக்கண்ணன் , க.அமுல், ஏ.ஆர்.ஆர்.. மலைச்சாமி,ந.சர்பஜெயாதாஸ், க.சர்மிளாகாந்தி, சி. ஆனந்தி, கே.வி.ராஜன், என். கார்த்திபன்,

மு.உமாபதி, இரா.அரிதாஸ் சி.எஸ்.இரவி, க.பாபு ,த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன்,ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், அ.ஜியாவுதீன், இரா.ஸீலாவேலு, எம்.லதா, எ.செந்தூர் பாண்டியன், மு.சாகுல் அமீது, எஸ்.சாக்ரடீஸ், இ. வேதா, இரா.ஜோதிமணி, வி.எஸ்.பிரபு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஏ.விஜய குமார் நன்றி கூறுகிறார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பாபு ஜனார்த்தனன்

நவம்பர் 14 (1989)

பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.

1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ப.ஆலன் தலைமையில்

மதுரவாயல் 145 ஆ வட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

பி.டி.பாண்டி செல்வம் - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை நவ:14

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி 145 ஆ வட்டத்தில் இன்று (14-11-2024 வியாழக் கிழமை) மாலை 6:30 மணி அளவில் பட்டேல் ரோடு நெற்குன்றம் 145 ஆவது வட்ட கழக அலுவலகத்தில் வட்ட கழக செயலாளர் ப.ஆலன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை கழக தொகுதி பொறுப்பாளர் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பி.டிபாண்டிசெல்வம், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் வளசரவாக்கம் மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

ஆகவே இக்கூட்டத்தில் 145 ஆ வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் (BLA 2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்ட செயலாளர் ப.ஆலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

அம்பத்தூர் தெற்கு பகுதி 89வது வட்டத்தில் வட்டத்திற்கு உட்பட்ட பாகங்களில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் நிகழ்வு நடைபெற்றது. சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, அம்பத்தூர் தெற்கு பகுதி 89வது வட்டத்தில் வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதிச் செயலாளர்) 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி., தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்), மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் எல்.பி.எப். மோகன், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் பி. முனியாண்டி, முன்னிலையில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் நிகழ்வில், மாமன்ற உறுப்பினர்கள், பி.எல்.ஏ.2 பாக நிலை முகவர்கள், வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.